# panguni utsavam at SrIrangam



arangan aDiyArs

of

SrIhayagrIvan likhita kaimkarya goshTi

sadagopan.org

Sincere thanks to Chi N Santhanakrishnan of www.thiruvarangam.com for providing all the images for this eBook

# CONTENTS


English summary of pranaya kalaham by SrI V Sadagopan 1

Tamil sambhAshaNai of praNaya kalaham 11


sadagopan.org

sadagopan.org



"uRaiyUr serti sevai on 6th day" (Thanks:www.thiruvarangam.com)

SrI:

SrIranganAyaki tAyAr sameta SrIranganAtha parabarhmaNe namaH

# Panguni uttiram utsavam at SrIrangam

Dear thiruvarangan bhaktAs:

Adhi BrahmOtsavam at Srirangam is taking place. On the 6th day of the brahmotsavam, Sri Ranganathan will travel to UrayUr to have His annual sErthi with Kamalavalli NaacchiyAr. It is a 7 hour trip across the Cauvery river and the Lord starts early at 4 AM in a big hurry to take part in His annual KalyANa Utsavam with UrayUr NaacchiyAr. He will wed His Devi, present His signature ring (KaNayAzhi) to His NaacchiyAr and will be with Her at the Serthi AastAna Mantapam from 1.15 PM to 11.30 PM. Together the newly wedded couple will bless all their devotees, who have assembled at Urayur, the ancient seat of ChOzha Kings and the home of ThiruppANa AzhwAr. He will travel back to Srirangam around midnight and get back to His AastAnam at Srirangam quietly. Perturbed by the sudden disappearance of Her Lord from Her side, Sri RanganAyaki will send out Her ladies-in-waiting to find out where Her Lord went in such a great haste. They report back that Sri Ranganathan spent the day at UrayUr visiting His beloved NaacchiyAr there and had presented His own ring to Her. Sri Ranganayaki gets angry over this dalliance of Her Lord and waits for a couple of days until Her birthday (Panguni Uttiram) for Her Lord to come to Her sannidhi to be with Her as if nothing had happened.

On the 7th day of the Utsavam, Sri RanganAthan will have an evening PuRappAdu with His Ubhaya NaacchiyArs after resting up during the day after the previous night's elaborate wedding celebrations and conjugal union with UrayUr NaacchiyAr. On the 8th day of the Utsavam, Our Lord will visit Yellaikkarai Mantapam and enjoy thereafter His kONal VyaaLi on His golden horse.

sadagopan.org

sadagopan.org



namperumal with ubhaya nAccimArs on the 7th day purappADu



namperumAl on golden horse -kONal vayALi day (day 8 of Brahmotsavam)

On the 9th day, it is Panguni Uttiram day and PourNami titi. Lord Ranganatha decides to visit His Principal Devi to bless Her on Her birth day and be with Her to enjoy Her company. He has no idea as to what is waiting for Him at Sri RanganAyaki's sannidhi. After starting on His journey to His Devi's Sannidhi, He remembers about the gem-studded golden ring that He had left behind at UrayUr. He decides to collect some funds from His bhakthAs to purchase another ring. He travels through Chittirai and Utthira Veedhis to assemble the needed funds to buy another ring, wear it and escape the wrath of Sri RanganAyaki.



namperumAl travels through the streets of SrIrangam on the 9th day morning

Around 9.30 AM, He reaches ThAyAr Sannidhi through the Nandavanam on the western side and is all set to be received by His Devi with open arms. He discovers to His shock that the door of His beloved Devi is shut and He is denied entry. Sri RanganAyaki refuses entry for Her Lord in to Her Sannidhi.

sadagopan.org



namperumal waits in front of SrIranganAcciyAr's sannidhi

Sri RanganAyaki asks now some tough questions through Her KaimkaryaparALs about the Lord's whereabouts couple of days before and asks Him to account for His disheveled state and love marks on His ThirumEni. She asks these questions through Her PandAris and the Lord comes up with some unconvincing answers through the arayars and tries to rush towards the door of His Devi's sannidhi to be with Her. Sri Ranga-nAyaki is leery about the responses of Her Lord to account for His mysterious absence from Srirangam on the 6th day of His Aadhi BrahmOtsavam. Each time the Lord rushes to enter, He is rebuffed and the sannidhi doors shut faster and faster. Sri Ranganayaki instructs Her servants not to step out and forbids the Lord to come in. Srirnaga-nAcchiyAr laughs over Her Lord's flimsy explanations. Her sannidhi servants now pelt the Lord with flower balls, banana and other fruits and butter!!! Smudges of those pelting are seen on the Lord and all those around. NamperumAL gives up now in

sadagopan.org

providing dubious answers and begs His Devi not to embarrass Him in public anymore and requests Her to let Him in to Her Saanidhi.



namperumAl rushes to enter tAyAr's sannidhi but She closes the doors!



praNaya kalaham - tAyAr's servants pelt namperumAl with fruits, butter etc. The missiles end up falling on devotees too !

sadagopan.org

A great dialog takes place between the dhivya dampatis and the Mattaydi (PraNaya Kalaham) utsavam continues for an hour and half in between the Lord's rush to the door of His Devi and His retreat after the rebuffs by Sri RanganAcchiyAr. During this dialog, the Lord recalls in great detail the tender and loving greetings of His Devi during His previous visits to Her Sannidhi. The angry devi asks Him to account for Her Lord's red eyes indicative of His sleep deprivation, tusseled hair, pale lips, the nail marks on His neck from love play, the kumkumam marks on His ThirumEni, the yellow turmeric marks on His upper garment and the signs of red lacquer on His sacred feet. She tells Her lord that She is deeply perturbed over all these strange signs and asks Him to return to UrayUr, where He spent a joyous night before. Lord RanganAthan answers each one of His Devis' questions and declares that He has never heard of UrayUr or has not seen the place with His own eyes. He asks His Devi not to humiliate Him in public and requests Her to accept the flower garlands that He has brought for Her and let Him in. Sri RanganAyaki continues to be angry with the trick that Her Lord played on Her by leaving Her side in the middle of the night for His rendezvous with Sri Kamalavalli of UrayUr. Our Lord now offers to swear by various pramANams to prove His innocence. His offers are deftly nullified by Sri RanganAyaki and She points out that all of the PramANams suggested by Her Lord are ParihAsa PramANams (laughable proofs) and asks Him to go back to UrayUr. She reminds Her Lord that He enacts this drama every year and She cannot put up with His akrutyams. At this time Swamy NammAzhwAr intervenes and appeals to Sri RanganAyaki to let Her Lord in and bless every one with their sErthi Sevai. Sri RanganAyaki could not say no to Her Ayyaa NammAzhwAr, accepts His plea and lets in Her Lord. She says: "I allow You now to enter My sannidhi based on the reasons advanced by our NammAzhwAr: nambaL NammAzhwAr sonnapadiyAlE UngaLai nAmm yERRukkoNDOm". Sri Ranganyaki listens to the pleas of Swamy NammAzhwAr and displays Her respect for the AzhwAr, forgives the Lord and accepts Him once again. The PraNaya Kalaham ends now and the Dhivya dampatis are united and are seen seated in the same simhAsanam.

sadagopan.org



Swami nammAzhwAr pleads for peace between the divya dampatis



Pranaya kalaham ends - namperumAl sends His garland to tAyAr

sadagopan.org

sadagopan.org



namperumAl - periya pirATTiyAr serti sevai on panguni uttiram

This is the only time in the entire year the Dhivya dampatis of Srirangam are seen together and bless us with Their sErthi sEvai. Arayars sing about the Vaibhavam of the Srirangam dampatis and the dress of Azhhagiya MaNavALan is changed 18 times during the sErthi sevai of the night and the wee hours of the next day. Our PirAtti is overwhelmed by the dhivya soundharyam of Her Lord and He in turn is delighted to make His Devi happy and the dhivya Mithunam (divine Couple) are full of Dayaa and Vaatsalyam for their children and shower them with the desired boons.

Swamy RaamAnujA was overwhelmed with the darsana soubhAgyam of the dhivya dampatis of Srirangam on one Panguni Uttira sErhti sevai and He peformed His SaraNAgathy at the sacred feet of the divine couple through His three immortal gadhyams: SaraNAgati, Sriranga and VaikunTha Gadhyams (http://www.srihayagrivan.org)

The verbatim  Tamil text of the dialog between Sri RanganAthan and Sri RanganAcchiyAr can be accessed as an anubandham to this book.

Translation is full of VaishNava ParibhAshai and is enacted by the arayars and PaNDAris; this samvAdham  is the most delightful one to read and reflect on the anyOnyam of the dhivya dampatis and Their special affection for us all.

The images of the Aadhi BrahmOtsavam of Lord RanganAthan including the Mattayadi Utsavam are accessible at Sriman MuraLi Battar Swamy's exquisite web site (http://www.Srirangapankajam.com) :

Please recite the three gadhyams and Sri Bhagavadh DhyAna SopAnam (ebook in http://www.sundarasimham.org  on this Panguni Uttiram day and be blessed with the anugraham of Srirangam dhivya dampatis.

namO SrI ranganAthAya,

dAsan,

Oppiliappan Koil VaradAchAri Sadagopan

sadagopan.org

# LINKS TO THE THREE GADYAMS OF BHAGAVAD RAMANUJA IN SRIHAYAGRIVAN SERIES:

1. SrIranga gadyam - http://www.srihayagrivan.org/html/ebook028.htm

2. VaikuNTha gadyam - http://www.srihayagrivan.org/html/ebook029.htm

3. SaraNAgati gadyam - http://www.srihayagrivan.org/html/ebook030.htm

# LINK TO SUNDARSIMHAM SERIES:

Bhagavad dhyAna sOpAnam - http://www.sundarasimham.org/ebooks/ebook75.htm

sadagopan.org

# anubhandam - praNaya kalaham
# Tamil sambhAshaNai

sadagopan.org




SrI ranganAcciyAr - SrIrangam

# ஸ்ரீரங்கநாத ஸ்வாமி கோயில்

## ஸ்ரீரங்கம்



# பங்குனி உத்திரம்

## ப்ரணய கலஹ உத்ஸவம்

ஸ்ரீ:

# முகவுரை

ஸ்ரீரங்கநாதன், ஸ்ரீரங்கம் என்னும் விமானத்தோடு திருப்பாற்கடலிலிருந்து ஆவிர்ப்பவித்து, ஸத்ய லோகத்தில் ப்ரஹ்மாவால் ஆராதிக்கப்பெற்று, பிறகு திருவயோத்தியில் இக்ஷ்வாகு மஹாராஜாவாலும் அவர் வம்சத்தரான சக்ரவர்த்திகளாலும் ஆராதிக்கப்பட்டு, சக்ரவர்த்தித் திருமகனிடத்திலிருந்து விபிஷண ஆழ்வானால் அடையப்பட்டு, திருக்காவேரியின் மத்தியில் சந்திரபுஷ்கரணி தீரத்தில் எழுந்தருளி, உறையூருக்கு அரசனான தர்மவர்மாவினால் ஆராதிக்க பட்டார். பூலோக வைகுண்டமாகிய மேற்படி ஸ்ரீரங்கத்தில் வசிக்கிற புண்யவான்கள் ப்ரஹ்மாவாலும், இக்ஷ்வாகு முதலானவர்களாலும் நடத்திவந்த பங்குனி மாதத்து சுக்லபக்ஷத்திய ஆதிப்ரஹ்மோத்ஸவத்தில் பங்குனி உத்திரம் என்கிற பெருமாள் - நாச்சியார் ப்ரணய கலகத்தைப் பெருமாளுக்கான அரையரைக் கொண்டும்,

நாச்சியாருக்காக நாச்சியார் பண்டாரிகளைக் கொண்டும் வாதிக்கும்படி செய்கிறார்கள்.

அதாவது:-

பங்குனி மாதம் சுக்லபக்ஷம் உத்திர நக்ஷத்திரத்தில் சூர்யோதய காலத்தில் ஸ்ரீரங்கநாதன் திருப்பல்லக்கில் ஏறியருளி, முன்னும் பின்னும் ஸ்ரீவைஷ்ணவோத்தமர்கள் ஸ்தோத்திரம் பண்ண, திருவெண்சாமரம், திருமுத்துக்குடை முதலிய உபசாரத்தோடு ஒவ்வொரு திருமாளிகையிலும் திருக்காவனம் பரிமாறி வாழைமரம், பாக்குக்குலை, முத்து, பவழங்களால் அலங்கரித்து ரமணீயமாய் இருக்கிற உள்திருவீதி, சித்திரை வீதிகளை வலம்வந்து ஸ்ரீரங்க நாச்சியார் திருச்சன்னதிக்கு அதிகமான ப்ரேமையுடன் எழுந்தருளும்போது, பெருமாள் உறையூர் நாச்சியாரிடம் போய் வந்தாரென்று கோபத்தாலே ஸ்ரீரங்கநாச்சியார் திருக்காப்புச் சேர்த்துக்கொண்டு பூப்பந்துக்களாலும், வாழைப்பழம், பலாச்சுளை முதலியவைகளாலும் எறிவித்து, வாசலிலேயே நிறுத்திவைக்கும்போது பெருமாளுக்கும் நாச்சியாருக்கும் நடக்கிற ஸம்வாதம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீரங்கநாதருக்கும் ஸ்ரீரங்கநாச்சியாருக்கும் நடந்துவருகிற மட்டையடி என்னும் ப்ரணயகலஹம்

## பெருமாள் அருளிச்செய்த பிரகாரம்

நாம் உத்ஸவார்த்தமாக புறப்பட்டருளி திருவீதிகளெல்லாம் வலம்வந்து தேவதைகள் புஷ்பவர்ஷம் வர்ஷிக்க ப்ராமணர்களெல்லோரும் ஸ்தோத்திரம் பண்ண, இப்படி பெரிய மனோரதத்தோடே தங்களிடத்தில் வந்தால் தாங்கள் எப்போதும் எதிரே விடைகொண்டு, திருக்கை கொடுத்து உள்ளே எழுந்தருளப் பண்ணிக் கொண்டுபோய் திவ்ய சிம்மாசனத்திலேறியருளப்பண்ணி, திருவடி விளக்கி திருவொத்து வாடை சாத்தி, திருவால வட்டம் பரிமாறி, மங்களாலத்தி கண்டருளப் பண்ணி சுருளமுது திருத்தி ஸமர்ப்பித்து இப்படி அநேக உபசாரங்களெல்லாம்

நடக்குமே இன்றைக்கு நாமெழுந்தருளின இடத்திலே திருக்காப்புச் சேர்த்துக்கொண்டு, திருமுக மண்டலத்தைத் திருப்பிக்கொண்டு, திருச்சேவடிமார்கள் கைகளாலே பந்துக்களாலும் பழங்களாலும் விட்டெறிவித்து, இப்படி ஒரு நாளும் பண்ணாத அவமானங்களையெல்லாம் இன்றைக்கு பண்ண வந்த காரியம் ஏதென்று கேட்டுவரச் சொல்லிப் பெருமாளருளிச் செய்த ப்ரகாரம்.

## நாச்சியார் அருளிச்செய்த ப்ரகாரம்

தாம் எப்போதும் போல எழுந்தருளினதே மெய்யானால் திருக்கண்களெல்லாம் சிவந்து இருப்பானேன்? திருக்குழல் கற்றைகளெல்லாம் கலைந்திருப்பானேன்? கஸ்தூரி, திருமண்காப்பு கரைந்திருப்பானேன்? திருவதரம் வெளுத்து இருப்பானேன்? திருக்கழுத்தெல்லாம் நகச் சின்னங்களாக இருப்பானேன்? திருமேனியெல்லாம் குங்கும பொடிகளாக இருப்பானேன்? திருப்பரி வட்டங்களெல்லாம் மஞ்சள் வர்ணமாயிருப்பனேன்?

திருவடிகளெல்லாம் செம்பஞ்சக் குழம்பாயிருப் பானேன்? இப்படிப்பட்ட அடையாளங்களைப் பார்த்து நாச்சியாருக்கு மிகவும் திருவுள்ளங்கலங்கி இருக்கிறது, ஆனபடியினாலே உள்ளேயிருக்கிற வர்களை வெளியிலே விடவேண்டாமென்றும், வெளியிலேயிருக்கிறவர்களை உள்ளே விட வேண்டாமென்றும் இப்படி கட்டுப்பாடு பண்ணிக் கொண்டிருக்கிற சமயத்திலே உள்ளே விண்ணப் பஞ்செய்ய சமயமில்லை, ஆனபடியினாலே நேற்றைக்கு எழுந்தருளின விடத்திலேதானே இன்றைக்கும் எழுந்தருளச் சொல்லி நாச்சியாரருளிச் செய்த ப்ரகாரம்.

## பெருமாள் அருளிச்செய்த ப்ரகாரம்

திருக்கண் சிவந்திருப்பானேன் என்றால் நாம் செங்கோலுடைய திருவரங்கச் செல்வரான படியினாலே கவிரி முடித்து, கல்கச்சை கட்டி, வல்லபமேந்தி, குதிரை நம்பிரான் மேலே ராத்திரி

முழுவதும் நித்திரையின்றி ஜகத்ரக்ஷணார்த்தமாக ஜாகரூகனாய் இருந்தபடியினாலே திருக்கண் சிவந்து போச்சுது. திருக்குழல் கற்றைகள் எல்லாம் கலைந்திருப்பானேன் என்றால் காற்றடித்து கலைந்து போச்சுது. கஸ்தூரி திருமண்காப்பு கரைந்திருப்பான் என்றால் அதிகடோரமான சூரியகிரணத்தால் கரைந்து போச்சுது. திருவதரம் வெளுத்திருப்பானேனென்றால் அசுர நிரஸனார்த்தமாய் தேவதைகளுக்காக சங்கத்வானம் பண்ணினபடியினாலே வெளுத்துப் போச்சு. திருக்கழுத்தெல்லாம் நகச்சின்னமாயிருப் பானேனென்றால் அதிபிரயாசமான காடுகளிலே போகிறபோது பூ முள்ளு கிழித்தது. திருமேனி யெல்லாம் குங்குமப்பொடிகளாய் இருப்பானேன் என்றால் தேவதைகள் புஷ்பவர்ஷம் வர்ஷித்த படியினாலே புஷ்ப ரேணு படிந்தது. திருப்பரி வட்டங்களெல்லாம் மஞ்சள் வர்ணமாயிருப்பானேன் என்றால் ஸந்த்யாராகம் போலேயிருக்கிற திவ்ய பீதாம்பர மானபடியினாலே உங்கள் கண்ணுக்கு

மஞ்சன் வர்ணமாகத் தோன்றுகிறது. திருவடிகளெல்லாம் செம்பஞ்சக்குழம்பாயிருப்பானேனென்றால், குதிரை நம்பிரான் மேலேறி அங்கவடிவமேல் திருவடிகளை வைத்துக்கொண்டு போனபடியினாலே திருவடிகள் சிவந்துபோயின. இப்படிப்பட்ட அடையாளமேயொழிய வேறில்லை. ஆனால், போதுகழித்து வருவானேன் என்றால் வேட்டையாடி வேர்த்து விடாய்த்து வருகிற ஸமயத்திலே திருமங்கையாழ்வாரென்பவன் ஒருவன் வந்து ஸர்வ ஸ்வாபஹாரத்தையும் பண்ணிக்கொண்டு போனான், அவனைச் சில நல்ல வார்த்தைகளைச் சொல்லித் திருவாபரணங்களை மெள்ள வாங்கிக் கொண்டு போய் கருகூலத்தில் எண்ணிப் பார்க்குமிடத்தில் கணையாழி மோதிரம் காணாமல் போச்சுது. அதற்காக விடிய பத்து நழிகைக்குப் புறப்பட்டருளி திருவீதிகளெல்லாம் வலம்வந்து கணையாழி மோதிரத்தை கண்டெடுத்துக் கொண்டு மீளவாரா நிற்கச் செய்து அப்பொழுது தேவதைகள் பாரிஜாத

புஷ்பங்கள் கொண்டு ஸேவிக்க வந்தார்கள். நாம் நம்முடைய பெண்டுகள் அன்னியிலே சூடுகிறதில்லை யென்று தமக்கு முன்னமே வரக்காட்டி நாமும் பின்னே எழுந்தருளினோம். ஆனபடியினாலே நாம் கொடுத்த புஷ்பத்தையும் வாங்கிக்கொண்டு நம்மையும் உள்ளே அழைக்கச் சொல்லி பெருமாளருளிச் செய்த ப்ரகாரம்.

## நாச்சியார் அருளிச்செய்த ப்ரகாரம்

கணையாழி மோதிரம் காணாமற்போனதே மெய்யானால் விடிய பத்து நாழிகைக்குப் புறப்பட்டருளி உறையூரில் போய், மின்னிடை மடவார் சேரியெலாம் புகுந்து யதாமனோரத மனுபவித்து அவ்வனுபவத்தாலே உண்டாயிருக்கிற அடையாளங்கள் எல்லாம் திருமேனியிலே தோற்றா நிற்கச் செய்தேயும் அவ்வடையாளங்களையும் அந்யாதவாகக்கொண்டு நாங்கள் ஏழைகளான படியினாலே இப்படிப்பட்டிருக்கிற வஞ்ச

நோக்திகளையெல்லாம் நேற்றைக்கு எழுந்தருளின விடத்திலே தானே சொல்லிக் கொண்டு இன்றைக்கும் அங்கே தானே எழுந்தருளச் சொல்லி நாச்சியார் அருளிச் செய்த ப்ரகாரம்.

## பெருமான் அருளிச்செய்த ப்ரகாரம்

நாமானால் உறையூரைக் கண்ணாலே கண்டதும் இல்லை; காதாலே கேட்டதுமில்லை. துஷ்டர்களாய் இருக்கிறவர்களும் மனதுக்கு சரிப்போனபடி சொன்னால் நீரும் அந்த வார்த்தைகளைத்தானே கேட்டுக்கொண்டு, நம்மையும் ஒரு நாளும் பண்ணாத அவமானங்களெல்லாம் பண்ணலாமா? நீங்கள் ஸ்திரீகளானபடியினாலே முன்பின் விசாரியாமல் பண்ணினீர்களாமென்கிற அவமானம் உங்களுக்கே யொழிய நமக்குத் தேவையில்லை. ஆனபடியினாலே நாம் கொடுத்த புஷ்பத்தையும் வாங்கிக்கொண்டு நம்மையும் உள்ளே அழைக்கச் சொல்லி பெருமாள் அருளிச் செய்த ப்ரகாரம்.

## நாச்சியார் அருளிச்செய்த ப்ரகாரம்

முந்தா நாள் அழகியமணவாளப் பெருமாள் வேட்டையாடி, வேர்த்து, விடாய்த்து எழுந்தருளினார் என்று அடியோங்கள் அதிப்ரீதியுடனே எதிரே விடை கொண்டு திருக்கை கொடுத்து உள்ளே எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போய் திவ்விய சிம்மாஸனத்தில் ஏறியருளப்பண்ணி, திருவடி விளக்கி, திருவொத்து வாடை சாத்தி, திருவால வட்டம் பறிமாறினோம். அப்போது அதிக சிரமத்தோடே எழுந்தருளியிருந்தார். ஆனால் இளைப்போ என்று வெந்நீர் திருமஞ்சனம் சேர்த்து ஸமர்ப்பித்தோம். அதை நீராடினது பாதியும், நீராடாதது பாதியுமாகே எழுந்தருளியிருந்தார். ஆனால் இளைப்போ என்று திருவரைக்குத் தகுதியான திவ்ய பீதாம்பரம் கொண்டுவந்து ஸமர்ப்பித்தோம். அதையும் எப்போதும் போல சாத்திக் கொள்ளாமல் ஏதோ ஒரு விதமாகச் சாத்தியருளினார். ஆனால் இளைப்போ என்று கஸ்தூரித் திருமண்காப்பு சேர்த்து

ஸமர்ப்பித்தோம். அதையும் எப்போதும் போல் சாத்திக்கொள்ளாமல் திருவேங்கடமுடையான் திருமண்காப்புபோல கோணாமாணாவாய்ச் சாத்தியருளினார். ஆனால் இளைப்போ என்று தங்க பள்ளயத்தில் அப்பங்கலந்த சிற்றுண்டி அக்காரம் பாலில் கலந்து வர்க்க வகைகள் முதலானதுகளைச் சேர்த்து ஸமர்ப்பித்தோம். அதையும் அமுது செய்தது பாதியும், அமுது செய்யாதது பாதியுமாய் எழுந்தருளியிருந்தார். ஆனால் இளைப்போ என்று சுருள்முது திருத்தி ஸமர்ப்பித்தோம். அதையும் அமுது செய்யாதபடி தானே எழுந்தருளியிருந்தார். ஆனால் இளைப்போ என்று திருவனந்தாழ்வானைத் திருப்படுக்கையாக விரித்து அதன் மேலே திருக்கண் வளரப்பண்ணி அடியோங்கள் திருவடிகளைப் பிடித்திருந்தோம். தாம் வஞ்சகரானபடியினாலே எங்களுக்கு ஒரு மாயா நித்திரையை உண்டாக்கி, எங்கள் கருகூலம் திறந்து, எங்கள் ஸ்திரீதனங்களான அம்மானை, பந்துகழஞ்சி, பீதாம்பரங்களையும்

கைக்கொண்டு, இன்னவிடத்துக்கு எழுந்தருளுகிறோம் என்று சொல்லாதபடி எழுந்தருளினார். அந்த உத்தர க்ஷணமே அடியோங்கள் அச்சமுடன் திடுக்கிட்டு எழுந்திருந்து திருப்படுகையைப் பார்க்குமிடத்தில் பெருமாளைக் காணாமையாலே கைநெரித்து வாயடித் தணுகவிடும் வாசற்காப்பாளரை அழைத்துகேட்கும் அளவில் அவர்கள் வந்து அம்மானை, பந்துகழஞ்சி, பீதாம்பரமான ஸ்திரீதனத்தையும் கைக்கொண்டு இன்னவிடத்துக்கு எழுந்தருளுகிறோம் என்று சொல்லாதபடி எழுந்தருளினார் என்று சொல்ல வந்தார்கள்! அந்த உத்திரக்ஷணமே அந்தரங்க பரிஜனங்களாயிருக்கிற திருச்சேவடிமார்களை அழைப்புவித்தோம். அவர்கள் வந்து அடிபிடித்து அடிமிதித்துக்கொண்டு போனவிடத்தில் உறையூரிலே கொண்டு போய்விட்டது. அங்கே மச்சினி என்றொருத்திக்கு முறைமை சொல்லி மற்றொருத்தியை மடியைப்பிடித்ததும். கச்சணி பொன்முலை

கண்ணால் அழைத்ததும். கனிவாய்க் கொடுத்ததும், கையில் நகக்குறி மெய்யாக ஆனதும், கார்மேனியெங்கும் பசுமஞ்சள் பூத்ததுமாகக் கரும்புத் தோட்டத்திலே யானை சஞ்சரிக்கிறாப் போலே தேவரீர் சஞ்சரிக்கிறீரென்று நாங்கள் உசிதமாகப் போகவிட்ட தூதியோடிவந்து அங்க அடையாளம் உள்ளபடி வந்து சொன்னாள். உம்மாலே எமது மனது உலைமெழுகாய் இருக்கிறது. ஒன்றும் சொல்லாதே போம்போமென்று நாச்சியார் அருளிச் செய்த ப்ரகாரம்.

## பெருமாள் அருளிச்செய்த ப்ரகாரம்

ஒருவருக்கொருவர் ஸம்சயப்பட்டால் அந்த ஸம்சயம் தீராமற்போனால் ப்ரமாணத்தாலே தீர்த்துக்கொள்வார்கள். அந்தப்படி ப்ரமாணம் பண்ணித் தருகிறோம்! நாம் தேவாதி தேவனான படியினாலே தேவதைகளைத் தாண்டித் தருகிறோம்! ஸமுத்திரத்திலே மூழ்குகிறோம்! அக்னி ப்ரவேசம் பண்ணுகிறோம்! பாம்புக் குடத்திலே கையிடுகிறோம்!

மழுவேந்துகிறோம்! நெய்க்குடத்திலே கையிடுகிறோம்! இப்படிப்பட்ட ப்ரமாணங்களையானாலும் வாங்கிக் கொண்டு நாம் கொடுத்த புஷ்பத்தையும் வாங்கி சூட்டிக்கொண்டு நம்மையும் உள்ளே அழைக்கச்சொல்லி பெருமாள் அருளிச்செய்த ப்ரகாரம்.

## நாச்சியார் அருளிச்செய்த ப்ரகாரம்

ஒருவருக்கொருவர் ஸம்சயப்பட்டால் அந்த ஸம்சயம் ஒரு ப்ரகாரத்தாலும் தீராமற்போனால் ப்ரமாணத்தாலே தீர்த்துக்கொள்ளுவார்கள் லோகத்திலே ப்ராஹ்மணனுக்கும் ப்ராஹ்மணனுக்கும் வாக்குவாதம் வந்தால் ப்ராஹ்மணன் ப்ராஹ்மணனை தாண்டிக் கொடுப்பான், தாம் தேவாதி தேவனான படியினாலே தேவதைகளைத் தாண்டிக் கொடுக்கிறோமென்று சொல்லவந்தீரே! அந்தத் தேவதைகள் தம்முடைய திருவடிகளை எப்போ காணப்போகிறோம்! என்று சதா ப்ரார்த்தித்துக்

கொண்டிருக்கிறவர்களை வலுவிலே தாண்டித் தருகிறோமென்றால் வேண்டாமென்பார்களா? சமுத்திரத்திலே மூழ்கிறோமென்று சொல்லவந்தீரே! ப்ரளய காலத்திலே ஸகல லோகங்களையும் திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்து ஒரு ஆலிலைத் தளிரிலே கண்வளர்ந்த தமக்கு ஸமுத்திரத்திலே முழுகிறது அருமையா? அக்னிப்பிரவேசம் பண்ணுகிறோம் என்று சொல்லவந்தீரே! ப்ரஹ்மாவுக்காக உத்திர வேதியில் ஆவிர்பவித்த தமக்கு அக்னியில் மூழ்கிறோம் என்றால் அக்னி சுடுமா? பாம்புக் குடத்திலே கை இட்டுத் தருகிறோமென்று சொல்ல வந்தீரே! சென்றாற் குடையாம், இருந்தாற் சிங்காதனமாமென்று ஸதாஸர்வகாலமும் திருவநந்தாழ்வான்மேலே திருக்கண்வளர்ந்திருக்கிற தமக்குப் பாம்புக் குடத்திலே கைவிட்டால் பாம்பு கடிக்குமா? மழுவேந்துகிறோம் என்று சொல்லவந்தீரே! கோடி சூர்யப்ரகாசமான திருவாழியாழ்வானை ஸதா திருக்கையிலே

தரித்துக்கொண்டிருக்கிற தமக்கு அப்ரயோஜகமான இரும்பு மழுவேந்துகிறது அருமையா? நெய்க் குடத்திலே கையிடுகிறோமென்று சொல்லவந்தீரே! க்ருஷ்ண அவதாரத்தில் பஞ்சலக்ஷம் குடியிலுள்ள நெய்யுண்ட தமக்கு நெய்க்குடத்தில் கையிடுவது அருமையா? இப்படிப்பட்டியிருக்கிற பரிஹாஸ ப்ரமாணங்களையெல்லாம் தமக்கு சரிப்போன இடத்திலேதானே பண்ணிக்கொண்டு இன்றைக்கும் அங்கேதானே எழுந்தருளச் சொல்லி நாச்சியார் அருளிச் செய்த ப்ரகாரம்.

## பெருமாள் அருளிச்செய்த ப்ரகாரம்

நாம் உத்ஸவார்த்தமாகப் புறப்பட்டருளி திருவீதிகள் எல்லாம் வலம் வந்து தேவதைகள் புஷ்ப வர்ஷம் வர்ஷிக்க, ப்ராஹ்மணர்கள் எல்லோரும் ஸ்தோத்திரம் பண்ண, இப்படி பெரிய மநோரதத் தோடே தங்களிடத்தில் வந்தால் தாங்கள் எப்போதும் போல் ஆதரியாமற்படிக்கு அபராதங்களைப்

பண்ணினோமென்கிறீர்கள். நாமானால் உறையூரைக் கண்ணாலே கண்டதுமில்லை. காதாலே கேட்டதும் இல்லை என்று சொன்னோம். அத்தை அப்ரமாணமாக நினைத்தீர்கள். ஆனால் ப்ரமாணம் பண்ணித் தருகிறோமென்று சொன்னோம். அத்தைப் பரிஹாஸ ப்ரமாணமென்று சொன்னீர்கள். இப்படி நாம் எத்தனை சொன்னபோதிலும் அத்தனையும் அந்யதாவாகக்கொண்டு சற்றும் திருவுள்ளத்தில் இரக்கம் வாராமல் கோபத்தால் திருவுள்ளங் கலங்கித் திருமுகமண்டலங்கறுத்துத் திருக்கண்கள் சிவந்து இப்படி எழுந்தருளி இருந்தால் நமக்கென்ன கதி இருக்கிறது? அழகிய மணவாளப் பெருமாள் ஸ்ரீரங்கநாச்சியார் சந்நிதி வாசலிலே தள்ளுபட்டுக் கொண்டிருக்கிறாரென்கிற அவமானம் உங்களக்கேயொழிய நமக்குத் தேவையில்லை. ஆனபடியினாலே நாம் கொடுத்த புஷ்பத்தையும் வாங்கிக் கொண்டு நம்மையும் உள்ளேயழைக்கச் சொல்லி பெருமாளருளிச் செய்த ப்ரகாரம்.

## நாச்சியார் அருளிச்செய்த ப்ரகாரம்

தாம் வருஷா வருஷம் அடமாயெழுந்தருளி தமக்குச் சரிப்போனபடி நடந்துப்போட்டு பின்னும் இங்கே வந்து நாமென்றும் அறியோமென்றும். ப்ரமாணம் பண்ணித் தருகிறோமென்றும் பரிஹாஸங்களைப் பண்ணி, இப்படிப்பட்டிருக்கிற அக்ருத்யங்களைப் பண்ணிக்கொண்டு வருகிறீர், நாமானால் பொறுக்கிறதில்லை, நம்முடைய அய்யா நம்மாழ்வார் வந்து மங்களமாகச் சொன்ன வாய்மொழியினாலே பொறுத்தோம், உள்ளே எழுந்தருளச் சொல்லி நாச்சியார் அருளிச் செய்த ப்ரகாரம்.

ப்ரணய கலகம் முடிந்தது. உடனே ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீரங்கநாச்சியாருடன் ஒரே ஸிம்ஹாசனத்திலெழுந்து அருளி சகல ஜனங்களுக்கும் ஸேவை ஸாதித்தருளுகின்றார்.

ப்ரணய கலஹம் முற்றிற்று.